<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 56/2022

Deposition of Witness : DW 2

Name : திவிஜேந்திரன் (வயது – 63)

Father's Name /W/o : த/பெ ராமநாயுடு

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : கஜலட்சுமிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.10.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் என்னை சாட்சி சொல்ல அழைத்தார்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்தார். என் பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லி தயார் செய்தது. அதிலிலுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் யார் வாதி மற்றும் பிரதிவாதி தெரியுமா என்றால் வாதி தரண்சாய் மற்றும் பிரதிவாதிகள் கோபால், பழனி, சாந்தி, சாமுண்டேஸ்வரி மற்றும் அஞ்சுகம் ஆவார்கள்.

2. வாதி பிரதிவாதிகள் பெயரில் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் பிரச்சினை அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிலம் எங்குள்ளது என்றால் பெருங்களத்தூரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டின் அருகில் மேற்படி நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் வசிக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு துரம் இருக்கும் என்றால் 15 கி.மீ தூரம் இருக்கும்.

3. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 234/2. விஸ்தீரணம் 2 ஏக்கர் 8 செண்ட். வாதி மேற்படி சொத்திற்காக தான் பிரதிவாதிகள் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.234/2 முதன் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டது. பொன்னுசாமி பெயரில் பாத்தியப்பட்டதற்கு நான் என்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் பட்டா மற்றும் அடங்கல் பார்த்தேன். எந்த வருடம் பார்த்தேன் என்றால் 25 வருடத்திற்கு முன்பு பார்த்தேன்.

4. எதற்காக பார்த்தேன் என்றால் பொன்னுசாமியின் தந்தை எனக்கு தெரியும் ஏற்கனவே தாவா சொத்து குறித்து 2007 அல்லது 2008 இல் நடந்த வழக்கை பற்றி எனக்கு சொன்னார் அப்போது நான் பார்த்தேன். மேற்படி பட்டா, அடங்கல் நான் பார்த்தேனா அல்லது அவர் காண்பித்தாரா என்றால் அவர் எனக்கு காண்பித்தார். எதற்காக எனக்கு தாவா சொத்து பட்டா, அடங்கல் காண்பித்தார் என்றால் வழக்கு பற்றி பேசும் போது காண்பித்தார்.

5. பொன்னுசாமியின் தந்தை பெயர் என்னவென்றால் நடேச பண்டிதர். பொன்னுசாமியின் தந்தை ஏற்கனவே எனக்கு தெரியும் என்று நான் சாட்சியம் அளித்தது உண்மையா அல்லது பொய்யா என்றால் உண்மை. நடேச பண்டிதரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு முதன் முதலில் பொன்னுசாமி பழக்கமா அல்லது கோபால் பழக்கமா என்றால கோபால் பழக்கம். கோபாலை எந்த வருடத்தில் இருந்து தெரியும் என்றால் 1995 ஆம் ஆண்டில் பழக்கம் அவர் எனக்கு நண்பர் ஆவார். 1995 ஆம் ஆண்டிற்கு முன்பு வழககு சொத்து, ஆவணங்கள் குறித்து என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. அசல் வழக்கு எண்.231/1988 வழக்கை பற்றி கோபால் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பானது என்று கோபால் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கு என்ன தீர்ப்பானது யாருக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்ற விபரம் கோபால் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார்.

7. மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பானது என்று கோபால் சொன்னார் என்றால் பொன்னுசாமி தாக்கல் வழக்கில் அவருக்கு சாதகமாக வரவில்லை என்று சொன்னார். எந்த வருடம் தீர்ப்பானது என்று சொன்னாரா என்றால் 1997 ஆம் ஆண்டில் தீர்ப்பானது என்று சொன்னார். மேற்படி அசல் வழக்கு எண்.231/1988 யார் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆறுமுகம் மற்றும் கணேசன் பண்டிதர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆறுமுகம் மற்றும் கணேசன் பண்டிதரை எனக்கு தெரியுமா என்றால் பார்த்து இல்லை மற்றும் பழக்கமும் இல்லை.

8. அசல் வழக்கு எண்.231/1988 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி வழக்கில் என்ன தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதிகள் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று வருவேன் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் அடிக்கடி என்றால் எப்போது சென்று வருவேன் என்றால் மாதம் ஒருமுறை சென்று வருவேன்.

9. அசல் வழக்கு எண்.231/1988 வழக்கில் நான் பொன்னுசாமிக்காக சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. மேல்முறையீடு வழக்கு எண் என்னவென்றால் 7/2015. மேற்படி மேல்முறையீடு வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. மேல்முறையீடு வழக்கு எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மேல்முறையீடு தீர்ப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

10. எந்த தேதியில் என்ன தீர்ப்பானது என்றால் 05.03.2016 தேதியில் பொன்னுசாமிக்கு சாதகமாக தீர்ப்பானது. என்ன தீர்ப்பு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் பொன்னுசாமிக்கு சாதகமானது மட்டும் தான் தெரியும். மேற்படி தீர்ப்பு பற்றி கோபால் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேல்முறையீடு தீர்ப்பின் முழு விபரம் நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

11. மேற்படி மேல்முறையீடு தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்ற விபரம் எனக்கு கோபால் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தை பொன்னுசாமி இறந்த பிறகு யார் அனுபவித்து வருகிறார் என்றால் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள். பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்பதற்கு அவர்கள் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் நான் பார்த்தேனா என்றால் இல்லை. பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளதோ அவர்கள் அனுபவத்து வருகிறார்கள் என்ற அர்த்தம் என்றால் சரிதான்.

12. தாவா சொத்து சர்வே எண்.234/2 குறித்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இப்போதைய உட்பிரிவு படி வாதி பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளது என்றால் சரிதான். பின்பு சாட்சி தானாக முன்வந்து எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்தார். தாவா சொத்து குறித்து பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்று நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

13. பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா கணேசன் என்பவர் பெயரில் தவறுதலாக மாற்றம் செய்யப்பட்டது என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எந்த வருடத்தில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் 2006 இல் மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் நேரடியாக தெரியும். மேற்படி விபரம் எப்படி தெரியும் என்றால் நண்பன் என்பதால் கோபால் சொல்லி தெரியும்.

14. அசல் வழக்கு எண்.231/1988 மற்றும் மேல்முறையீடு எண்.7/2015 நிலுவையில் இருந்த போது தான் தாவா சொத்தை வாங்கியுள்ளார்கள் என்று நான் என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் யார் யார் வாங்கினார் என்றால் கணேசன் பண்டிதரின் மனைவி ஈஸ்வரியம்மாள், ரவி என்பவரிடத்திலிருந்து தரண் சாய் வாங்கியுள்ளார். மேற்படி விபரம் கோபால் சொல்லி எனக்கு தெரியுமா என்றால் கோபால் சொல்லி எனக்கு தெரியும் மற்றும் ஆவணங்கள் படித்து பார்த்து தெரியும்.

15. ரவி எந்த வருடத்தில் வாங்கினார் என்றாலும் தரண்சாய் எந்த வருடத்தில் தாவா சொத்தை வாங்கினார் என்றால் 2006 இல் ரவி தாவா சொத்தை வாங்கினார். 2022 ஆம் ஆண்டில் தரண்சாய் வாங்கினார். மேற்படி ஆவணங்களை நான் எந்த வருடம் வாங்கி பார்த்தேன் என்றால் கோபால் வாங்கி எனக்கு காண்பித்தார். மேற்படி ஆவணங்கள் கோபால் எந்த வருடம் என்னிடம் காட்டினார் என்றால் 4 மாதங்களுக்கு முன்பு இருக்கும்.

16. மேற்படி இரண்டு ஆவணங்களில் என்ன சர்வே எண்கள் மற்றும் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆவணங்களை பார்க்காதால் தான் மேற்படி சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் 72 செண்ட் தரண்சாய் வாங்கினார். சர்வே எண்ணின் உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எதனால் கட்டுப்படுத்தாது என்றால் பிரதிவாதிகள் வீட்டின் பக்கத்தில் தாவா சொத்து உள்ளது அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் அதனால் கட்டுப்படுத்தாது.

17. ஏற்கனவே பிரதிவாதிகள் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் பிறகு எப்படி அனுபவித்து வருகிறார்கள் என்றால் தற்போது பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை. நான் பிரமாண பத்திரத்தில் LIS–PENDENS என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் அதற்கான அர்த்தம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி LIS–PENDENS என்ற வார்த்தையை யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லவில்லை.

18. அபகரிக்கும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவத்துள்ளேன் என்றாலும் யார் தாவா சொத்தை அபகரித்தது என்றால் வாதி அபகரிக்கும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தாவா சொத்தை அபகரித்ததால் பிரதிவாதிகள் எதிர் வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சர்வே எண்

உட்பிரிவு செய்த சொத்து சீனிவாசன் என்பவர் வாங்கியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு விஸ்தீரணம் சீனிவாசன் வாங்கியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சீனிவாசனிடமிருந்து டில்லி பாண்டுரங்கன் சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்து குறித்து அசல் வழக்கு எண்.57/2022 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

19. இந்த வழக்கு சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் கோபால் என் நண்பர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோபால் சொல்லி கொடுத்ததை வைத்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு சொத்து பற்றி முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.